# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்)

**சமாதி சமூக அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*மாத்தறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ புத்திக பதிரண அவர்களால் 2021, ஓகத்து மாதம் 04 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2021, யூலை மாதம் 26 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **65 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சமாதி சமூக அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற் கானதொரு சட்டம்

*முன்னுரை*

“சமாதி சமூக அபிவிருத்தி மன்றம்” எனக் குறிப்பிடப்பட்டு அழைக்கப்படும் மன்றம் ஒன்றை அந்த மன்றத்தினர் உறுப்பினர்கள் உடன்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைய அந்த மன்றம் சம்பந்தப்பட்ட சகல விடயங்கள் மற்றும் நோக்கங்களை பலனளிக்கக்கூடிய வகையில் அமுல்படுத்தல் மற்றும் கொண்டு செல்லும் நடவடிக்கைகளுக்காக இலங்கையில் நிறுவப்பட்டுள்ளது :

இந்த மன்றம் நிறுவப்பட்டுள்ளது என்பதானது எத்தகைய நோக்கங்கள் காரணிகளுக்காகவோ அத்தகைய நோக்கங்களும் காரணிகளும் இந்த மன்றம் மூலம் இதுவரை காலமும் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டும் நிறைவேற்றப்பட்டும் இருப்பதனால் மற்றும் இந்த மன்றத்தை கூட்டுத்தாபனமாக்குவதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளதாலும் அதன் வேண்டுகோள் மக்கள் நலன்கருதி நிறைவேற்றப்படுகின்றது என்பதனாலும் இலங்கைச் சனநாயக சோலிசக் குடியரசின் பாராளுமன்றம் மூலம் இவ்வாறு நிறைவேற்றப்படுகின்றது :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் இத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*குறுகிய தலைப்பு*

**1.** இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என அறியப்படும்.

*சமாதி சமூக அபிவிருத்தி மன்றத்தினைக் கூட்டிணைத்தல்*

**2.** இங்கு இனிமேல் மன்றம் என குறிப்பிடப்படும் சமாதி சமூக அபிவிருத்தி மன்றத்தில் தற்போது அங்கத்தவர்களாய் உள்ளவர்கள் சட்டம் அமுல்படுத்தப்பட்டது முதல் அதன்பின் உறுப்பினர்களாய் சேர்த்துக் கொள்ளப்படுபவர்கள் “சமாதி சமூக அபிவிருத்தி மன்றம்” எனும் நாமம் மற்றும் அடையாளத்தின்கீழ் (இனி கூட்டுத்தாபனம் எனக் குறிப்பிடப்படும்) மன்றத்தின்கீழ் தொடர்ச்சியாக உறுப்பினர்களாய் உட்படுத்தப்படுவார்கள்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்*

**3.** கூட்டுத்தாபனம் கூட்டிணைக்கப்படுவது கீழே குறிப்பிடப்படும் பொதுக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காகும் :-

(அ) கல்வி வசதிகள் அற்ற ஏழை நிலையில் உள்ள சிறுவர்கள் இளைஞர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் மற்றும் முன்பயிற்சி நடவடிக்கைகளை ஒழுங்குசெய்தல் நடாத்துதல் முன்னேற்றமடையச் செய்தல் ;

(ஆ) பொதுமக்கள் நலன்கருதி இளைஞர் சிரமங்களை ஒருமுகப்படுத்துதல் ;

(இ) இளம் விவசாயிககளை ஊக்குவித்தல் விவசாய கழகங்களை நிறுவுதல் ;

(ஈ) தொழில்முன்னிலைக் கல்விப் பயிற்சி, விளையாட்டுத் துறைப் பயிற்சி, தலைமைத்துவ, கணினி, ஊடகவியல் தமிழ், ஆங்கிலம் மற்றும் ஏனைய மொழிப்பயிற்சிகளுக்கு வசதிபெற்றுக் கொடுத்தல் ;

(உ) மக்களின் மதி வளர்ச்சியை ஏற்படச் செய்யும் விரிவுரைகள் கருத்தரங்குகள் செயற்பாட்டு வழிகாட்டல் சம்பந்தமாக கண்காட்சி கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்குசெய்தல் ;

(ஊ) நூல் நிலைய வசதிகளைச் செய்தல் ;

(எ) சூழல் பாதுகாப்பு மற்றும் சமநிலையான அபிவிருத்தி;

(ஏ) மேலே குறிப்பிட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுமுகமாகத் தேவையான நன்மைபயக்கும் அல்லது கருதப்படும் வேறு விடயங்களை மேற்கொள்ளல்.

கூட்டுத்தாபனத்தின் பொது அதிகாரங்கள்

**4.** இந்த சட்டமூலம் மற்றும் வேறேதேனும் எழுத்துமூலமான சட்டவறைகளின் நடைமுறைக்கு உட்பட்டு கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்குத் தேவையான வங்கிக் கணக்கை ஆரம்பித்துக்கொண்டு செல்லல் மற்றும் மூடிவிடல் மற்றும் பிணையுடனான அல்லது பிணையின்றி பணம், கடன்பெறல் அல்லது பெற்றுக்கொள்ளல், நன்கொடைகள், அன்பளிப்புக்கள் பொறுப்பேற்றல் மற்றும் சேகரித்தலும் சொந்த நிதியத்தினை முதலீடு செய்வதிலும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அதிகாரிகளையும் ஊழியர்களையும் சேவையில் ஈடுபடுத்தும் சேவையில் வைத்திருத்தல் மற்றும் சேவையிலிருந்து நீக்கும் அதிகாரம் உட்பட கூட்டுத்தாபனத்தின் கொள்கைகள் மற்றும்

அக்கொள்கைகளிடையே ஏதாவது ஒரு குறிக்கோளை வளர்ச்சியடையச் செய்தல் அல்லது முன்னேற்றமடையச் செய்தலுக்குத் தேவையான அல்லது யோக்கியதையுடைய எந்த வகையிலுமான அல்லது சகல நடவடிக்கைகள் மேற்கொள்ளல், காரணிகளை நிறைவேற்றல் மற்றும் செயற்படுத்துதல் அதிகாரம் கூட்டுத்தாபனத்திற்கு உள்ளது.

*கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்தல்*

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் தலைவர், முகாமைத்துவப் பணிப்பாளர், செயலாளர், பொருளாளர், உட்பட கூட்டுத்தாபனத்தின் தற்போது அமுலில் உள்ள ஒழுங்கு விதிகளுக்கு அமையத் தெரிவு செய்யப்படும் ஆறு பேர்களுக்கு மேற்படாத உறுப்பினர் தொகையடங்கிய நிறைவேற்றுக் கமிட்டி மூலம் இச்சட்டத்தின் ஏனைய ஒழுங்குவிதிகள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் தற்கால அதிகாரத்தின் ஒழுங்கு விதிகளுக்கும் அமைவாக முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும்.

(2) இச்சட்டம் அமுல்படுத்தப்படுவது ஆரம்பமாகும் திகதிக்கு முன்னைய தினத்தில் இருந்து மன்றத்தில் பதவி வகித்த உறுப்பினர்களால் கூட்டுத்தாபனத்தின் முதல் முகாமைத்துவ சபை உள்ளடக்கப்பட வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் ஒழுங்கு விதிகள்*

**6**. (1) ஒரு பொதுக் கூட்டத்திலும் சமூகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத பெரும்பான்மை கொண்டு, இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாயிராத விதிகளை, பின்வரும் கருமங்கள் எல்லாவற்றிக்கும் அல்லது அவற்றுள் எதற்காகவேனும் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டபூர்வமானதாதல் வேண்டும் :-

(அ) முகாமைச் சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்தல், நியமித்தல் அல்லது பெயர்குறித்து நியமித்தலும் அவர்களின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் பதவிக்காலமும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களினதும் முகவர்களினதும் மற்றும் சேவையாளர்களினதும் கடமைகளினதும், பணிகளினதும் தத்துவங்களும், நடத்தையும் ;

(இ) கூட்டுத்தாபனத்தினதும் முகாமைக்குழுவினதும் கூட்டங்களில் அவதானிக்கப்பட வேண்டிய நடைமுறையும் அதன் கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும், அத்தகைய கூட்டங்களின் நேரங்களும், இடங்களும், அறிவித்தலும், நிகழ்ச்சிநிரலும், அதற்கான கூட்ட நடப்பெண்ணும், அதில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதலும் ;

(ஈ) முகாமைக்குழுவினதும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பாண்மைக்கான தகைமைகளும் தகைமையீனங்களும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமைசெய்தலும் அதன் நிதிகளின் கட்டுக்காப்பும் கணக்குகளைப் பேணுதலும், அவற்றின் கணக்காய்வும்; அத்துடன்

(ஊ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தின் இயற்றப்பட்ட ஒழுங்கு விதி (1) இன் உபபிரிவின்கீழ் இயற்றப்பட்ட ஏதாவதான ஒழுங்கு விதியொன்று அதுபோன்ற ஏதாவது ஓர் கூட்டத்தில் மற்றும் அதுபோன்ற வகையிலான திருத்தங்கள் செய்வது மாற்றம் செய்வது, அதற்கு ஏதாவது சேர்த்தல் அல்லது நீக்குதல் செய்ய முடியும்.

(3) இச்சட்டம் அமுல்படுத்தப்படுவதற்கு முன்னைய தினத்தில் மன்றத்தில் அதிகாரத்தில் இருந்த ஒழுங்கு விதிகள் இச்சட்டம் அல்லது வேறு ஏதாவது எழுத்துமூல சட்டம் ஒன்றின் விதிகளுக்கு அமைவு அற்று இருக்கும் வரை இந்த விதிமுறை இயற்றப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிமுறையென கருதப்படவேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் சகல உறுப்பினர்களும் கூட்டுத்தாபனத்தின் தற்கால விதிமுறைகளுக்குக் கட்டுப்பட வேண்டும்.

நிதியம் மூலம் செலுத்த வேண்டிய அதற்குச் சேரவேண்டிய கடன்கள்

7. இச்சட்டம் அமுல்படுத்தப்படல் ஆரம்பம் ஆவதற்கு முன்னைய தினம் இருந்த மன்றத்தில் சகலவித கடன் மற்றும் செலவினங்கள் கூட்டுத்தாபனத்தினால் செலுத்த வேண்டிய தோடு அன்றைய தினம் மன்றத்திற்கு அறவிடப்படவேண்டிய சகல கடன் அல்லது செலுத்த வேண்டிய சந்தாப்பணம் அல்லது

அன்பளிப்புப் பணம் இச்சட்டத்தின் நடவடிக்கைகளுக்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படவேண்டும்.

*கூட்டுத்தாபனத்தினால் அசையா, அசையக்கூடிய சொத்துக்களை வைத்திருத்தல்*

**8**. ஏதாவது ஒரு பொருளை வாங்கியதன்மூலம், நன்கொடை மூலம், வழங்கல் மூலம் பெறப்படும் அசைவன மற்றும் அசையாத எந்தவொரு சொத்தாயினும் இதன் சட்டங்களுக்கு அமையப் பெற்றுக் கொள்வதற்கும் வைத்திருப்பதற்கும் கூட்டுத்தாபனத்திற்கு சட்டத்தின் மூலம் இயல்பு மற்றும் சாத்தியம் இருக்க வேண்டும். அத்தோடு அப்படிப்பட்ட சகல சொத்துக்களையும் தற்பொழுது கூட்டுத்தாபனத்தில் அதிகார அமுலில் உள்ள ஒழுங்கு விதிகளுக்கு அமைய அவைகளை விற்பனை செய்யவும், அடகு வைக்கவும் குத்தகைக்கு வழங்கவும், கைமாறு செய்யவும் அல்லது வேறு விதமாய் நீக்கச் செய்யவும் பூரண அதிகாரத்துடன் இச்சட்டத்தின் செயற்பாடுகளுக்காக கூட்டுத்தாபனத்தினால் வைத்திருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் முத்திரை*

**9**. கூட்டுத்தாபனத்தின் முத்திரை, கூட்டுத்தாபனத்தின் விதிமுறைகளுக்கு அமைய தெரிவு செய்யப்பட்ட நபர் ஒருவர் முன்னிலையில் அல்லது எந்தவொரு பத்திரிகையிலும் வைத்தல் கூடாது. அத்தோடு தான் பிரசன்னமாயிருந்தபடிக்கு அத்தாட்சியாக பத்திரத்தில் தனது பெயரையும் கையொப்பத்தையும் வைக்க வேண்டும். மேலும் அந்தக் கையொப்பமிடல் சாட்சியாளராக ஒருவரால் ஒப்பமிடுதலுக்கு அப்பாற்பட்டதாக இருத்தல் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையவர்களினதும் உரிமைகளைப் பேணுதல்*

**10**. இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களின் மற்றும் அவர்கள் மூலம் அவர்களால் அல்லது அவர்களின் கீழ் உரிமைகோரும் வேறு ஒருவரின் உரிமைகள் தவிர்ந்த, குடியரசின் அல்லது வேறு அரசசபை ஒன்றினது அல்லது கூட்டுத்தாபனம் ஒன்றினது அல்லது வேறு எவராவது நபர்களினது அல்லது உரிமைகளுக்கு இச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள எதன் மூலமும் பாதிப்பு அல்லது அழுத்தம் ஏற்படக் கூடாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**11**. இந்தச் சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.